# திருக்கோயில்

தவத்திரு குன்றக்குடி அடிகளார்
தமிழ்நாடு

தமிழினத்தின் சமய வாழ்வியலில் திருக்கோயில் மிகவும் சிறப்பானதோர் இடத்தைப் பெற்று விளங்குகிறது. தமிழினம் வரலாற்று அறிவிற்கெட்டிய முற்காலம் தொட்டே இறைவனைக் கைப்பொருளாகக் கண்ணுக்கினிய பொருளாக ஏற்றுத் திருக்கோலத் திருமேனி அமைத்து வழிபட்டு வந்திருக்கிறது. எந்த ஒரு சிந்தனைத் தத்துவத்துக்கும் சின்னமும் சடங்கும் இன்றியமையாதன. ஒரு கருத்தின் பரிணாம வளர்ச்சியே சின்னத்திலும் சடங்கிலும் கொண்டுபோய் விடுகிறது. நம்முடைய சமயச் சார்பிலுள்ள சின்னங்களை -சடங்குகளைக் கண்டிக்கின்ற பிற சமயங்களும் கூடச் சின்னங்கள் சடங்குகளிலிருந்து முற்றிலும் விடுபட்டவை அல்ல என்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டும். ஏன்? பகுத்தறிவுவாதிகளும்கூட இதற்கு விலக்கல்லர். தம்முடைய சிந்தனையைக் கருத்தைப் புறத்தே வெளிப்படுத்த மற்றவர்க்கு உணர்த்த -தம்முடைய உணர்வை நிலைநிறுத்திக்கொள்ளச் சின்னங்களும் சடங்குகளும் பெரிதும் துணை செய்யும் என்றே கொள்கின்றனர். இஃது ஓரளவு வளர்ந்தவர்களுக்கு, வளர வேண்டியவர்களுக்குச் சின்னங்கள் சடங்குகளின் வாயிலாகவே பெற வேண்டிய உணர்வை பெற முடியும்.

திருக்கோயில் வழிபாட்டில் நம்முடைய சமுதாயம் மிகவும் சிறப்புற ஓங்கி வளர்ந்திருந்தது. சங்க காலத்திலேயே நகரமெனக் கருதத் தக்க பெருங்கோயில் இருந்ததாகப் புறநானூறு பேசுகிறது. தமிழகத்தை ஆண்ட பேரரசுகள் தாம் வாழ்ந்த மனைகளைக்கூட வளமனைகளாகப் பெரும்பாலும் எடுக்கவில்லை. குடிமக்களோடு குடிமக்களாக ஒன்றித்து வாழ்ந்த அவர்களுடைய எளிமையை என்னென்று கூறிப் பாராட்டுவது ? ஆயினும் இந்த உலகுக்கு அம்மையப்பராக விளங்கும் இறைவனுக்கு விண்ணளந்து காட்டி வெவ்வினை நீக்கி வேண்டிய வரம் கொடுக்கும் கோயில்கள் நிறைய எடுத்தார்கள்.

திருக்கோயில் வழிபாடு நமக்கு இன்றியமையாதது. நமது உணர்வு பரபரப்பானது; சென்ற இடங்களில் செல்லும் இயல்புடையது. இதனை இழுத்துப் பிடித்து நிறுத்தி உணர்வுகலந்த வழிபாட்டில் ஈடுபடுத்துவதற்குத் திருக்கோயில் ஏற்ற இடம். உயிர்கள் உந்தி உயர்வதற்கு உறுதுணையாக இருப்பன ஐம்புலன்களைப் பற்றி இன்புறும் ஐம்பொறிகளேயாம். இவற்றில் ஒன்று வழிபாட்டில் ஈடுபட்டுப் பிறிதொன்று ஈடுபடாது போனாலும் பலனில்லை. இந்த ஒருமைப்பாட்டினை உருவாக்கும் ஆற்றலும் சூழலும் உடையது திருக்கோயில். திருகோயில் வழிபாடு நமது வழிவழி மரபு. அதனாலன்றோ அப்பரடிகள் திருக்கோயில் சூழ்தலை உடன்படுமாறு வற்புறுத்த, "ஒரு காலும் திருக்கோயில் சூழாராகில்...." என்று திருக்கோயில் சூழாதாரை உறவுகொள்ள மறுக்கிறார்.

இங்ஙனம் வழிவழிச் சிறந்துவரும் திருக்கோயில் வழிபாட்டில் வரவர வணிகப் போக்கு மேம்பட்டு வருகிறது. ஆங்கும் வேண்டத்தக்க அமைதிக்குப் பதில் ஆரவாரம் தலைகாட்டுகிறது. "காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி" நின்று அரற்றக்கூடிய திருக்கோயிலில் இன்றைய சூழல் என்ன? ஆங்குக் காதலும் கனிவும் இன்று அரும்புகிறதா ? எந்தத் திருமுறைப் பாடல்களை இறைவன் கேட்க விரும்பிக் காமுற்றானோ, அந்தத் தனித் தமிழ்ப் பாடல்கள் ஆங்கு ஓதப் பெறுகின்றனவா ? இறைவனே "அருச்சனை பாட்டேயாகும்" என்று தெளிவுற எடுத்துக்காட்டிய பிறகும், இன்று திருக்கோயில்களில் நடைபெறுவது திருமுறை அருச்சனையா ? அப்பரடிகள் அருளிய போற்றித் திருத்தாண்டகம் ஐந்தும் அருச்சனைப் பதிகம் எனப்படும். அவை என்ன ஆயிற்று? அதுபோல் திருவாதவூரடிகள் மொழிந்த போற்றித் திருவகவலும், காருணியத்து இரங்கலும் என்ன ஆயிற்று ?

போற்றி மந்திரம் ஓதிப் பூத்தூவுவார்க்கன்றி ஏனையார்க்கு இறைவன் அருளான் என்னும் உண்மையினைப் பின்வருமாறு உணர்த்துகின்றன திருமுறைகள் :

"செழுந்தண் மால்வரை எடுத்த செருவலி இராவணன் அலற
அழுந்தவூன்றிய விரலான் போற்றி என்பார்க் கல்ல தருளான்
கொழுங்கனி சுமந்துந்திக் குளிர்புனல் நிவர்மல்கு கரைமேல்
அழுந்துஞ் சோலை நெல்வாயில் அரத்துறையடிகள் தம் அருளே" (2. 90. 8)

"ஆக்கை யாற்பயனென் - அரன்
கோயில் வலம்வந்து
பூக்கையால் அட்டிப் போற்றியென் னாத இவ்
ஆக்கை யாற் பயனென்" (- 4. 9. 8)

"தெருளு மெய்க்கலை விளங்கவும் பாருளோர் சிந்தை
இருளும் நீங்கவும் எழுதுசொல் மறை அளிப்பவர் தாம்
பொருளும் ஞானமும் போகமும் போற்றி என்பாருக்
கருளும் அந்தணர் திருஅரத் துறையை வந்தணைந் தார்" ( - 12. சம்பந்தர், 224.)

தேவரெல்லாம் தொழும் தேவன், நம் தலைவன், "தமிழோடிசை கேட்கும் இச்சையால் காசு நித்தம் நல்கினான். மொழிக்கு மொழி தித்திப்பான மூவர் சொல்லும் தமிழ் கேட்டான்; தண்ணளி சுரந்தான். இன்றோ இறைவனுக்கும் நமக்கும் இசைவை உருவாக்கச் சக்தியற்ற அருச்சனை முறைகளே நடைமுறையிலிருக்கின்றன. சிவ சிந்தனையில் நாம் வளரவேண்டும் என்று விரும்பும் அனைவரும் திருக்கோயில்கள் அனைத்திலும் திருமுறை அருச்சனையே நடைபெறச் செய்ய வேண்டும். இதற்குக் கிளர்ச்சியே செய்தாலும் தவறில்லை. ஏனெனில் சிவபெருமானே செந்தமிழ்ப் பாட்டுக் கேட்கக் கிளர்ச்சி செய்திருக்கிறான். அமைந்திருந்து கேட்டு அளவிலா இன்புற்றுப் பூட்டிய கதவைத் திறந்துகொண்டு வெளிவந்திருக்கிறான். இதனைத் திருமறைக்காட்டுத் திருகோயில் வரலாறு பேசும். பண் சுமந்த பாடற் பரிசு பெறக் கலிமதுரையில் மண் சுமந்தான். சுந்தரரின் சுந்தரத் தமிழ்ப் பாட்டுக் கேட்டு மகிழ்ந்ததில் சேரமான் பூசனைக்குச் செல்லும் செயலையும் மறந்தான். பெண்ணும் பொன்னும் பெருஞ் சோறுஞ் சேர்த்துக் கொடுத்துச் செந்தமிழ் கேட்டான். அப்பரடிகளின் அமுதத் தமிழை ஆர்ந்து அநுபவிக்க அவர்தம் உரிமையாகிய வீடும் அப்பொழுதே கொடுக்க வேண்டியும் காலம் தாழ்த்தினான்.

நம் இறைவன் ஆடுகின்ற அரசு; தெற்கு நோக்கியே ஆடுகின்றான். தென்திசை நோக்கியே நகர்ந்து நகர்ந்து ஐம்பெரும் மன்றத் திருத்தலம் அமைத்துக்கொண்டு ஆடுகிறான். தெற்கில் என்ன புதுமை? வடகரையிலன்றோ கயிலாயம் இருக்கிறது! வடமலையில் கயிலை இருக்கலாம். ஆனால் அங்குச் சந்தனப் பொதியத் தென்றலில்லை. அத்தென்றலோடு அளாவும் தேமதுரத் தமிழும் இல்லை. தென்றலையும் தேமதுரத் தமிழையும் ஆர்ந்து அனுபவிக்கவே அண்ணல் தென் திசையை நோக்கி ஆடுகிறான். இது வடபுலம் வெற்றி கண்ட நற்றமிழ்க் குமரகுருபரரின் கருத்து. ஆதலால் இறைவனை மகிழ்வித்து நாம் மகிழத் திருமுறை அருச்சனையே துணை.

நம்முடைய சமயம் சாதிப்பிரிவினைகளுக்கு அப்பாற்பட்டது. ஒரு குல நெறியே, உயர் சைவநெறி. ஆனால் இன்னமும் நம்முடைய திருக்கோயில்களில் இடையே புகுந்த சாதிமுறை அமைப்பைக் காப்பாற்றிக்கொண்டு வருகிறோம். இஃது ஓர் அவலம் என்பதை இன்னமும் நாம் உணராதது ஏனென்றே விளங்கிக் கொள்ள முடியவில்லை. நம்முடைய ஞானாசிரியர்கள் "சாத்திரம் பல பேசும் சழக்கர்காள், கோத்திரமும் குலமும் கொண்டு என் செய்வீர் ?" என்று இடித்துக் கேட்ட பிறகும், சாதிகுலம் பிறப்பென்னும் சுழிப்பட்டுத் தடுமாறும் ஆதமிலிநாயேன்" என்று இரங்கத்தக்க நிலையை எடுத்துக்காட்டிய பிறகும் நாம் சாதி உணர்வுகளிலிருந்து விடுபட்டோமில்லை. "ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும் கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்பராகில் அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே" என்ற அப்பரடிகளின் பாட்டைப்பாடி மகிழ்ந்தோமேயன்றி அப்பாட்டுணர்த்தும் பொருளை உணர்ந்தோமில்லை; அப்பரடிகளும், அப்பூதியடிகளும் கொண்டுள்ள அன்பின் உறவைச் சேக்கிழாரின் செஞ்சொற் காவியத்தில் படித்து மகிழ்ந்தோமேயன்றி சமுதாய அமைப்பில் அத்தகைய நல்லிணக்க உறவுகள் உருவாகவில்லை. அன்பிற்கோர் திருவுருவமாய் விளங்கிய கண்ணப்பர் வரலாறு காவியத்தில் கண்டோமேயன்றி வாழ்க்கையில் கண்டோமில்லை. கண்ணப்பர் வரலாறு நம்முடைய சமுதாய சமய வரலாற்றில் ஒரு மையம் -ஒரு வரலாற்றுத் திருப்பு முனை. கண்ணப்பர் சிவகோசரியார் பாத்திரங்கள் மூலம் இறைவன் நமக்கு உணர்த்தியது அன்புகலந்த வழிபாடேயாகும்.

இறைவன் அடியார்களின் தூய அன்பைத் துய்த்து மகிழ்கின்றான். அடியார்களின் தூய அன்பை ஆரத்துய்த்து அனுபவிப்பதில்தான் அவனுக்கு ஏக்கம் அதிகம். நாம் இறைவனோடு கொள்ளும் காதல் உறவு ஒருபோதும் கைக்கிளை அல்ல. நாம் அவனைக் காதலித்துத் தேடும்

ஆர்வத்திலும் பன்னூறு மடங்கு அவன் நம்மைக் காதலித்துத் தேடி வருகிறான். நாம் அவனது திருவருளுக்கு ஏங்கிக் கிடப்பதுபோலவே அவனும் நமது அன்புக்கு ஏங்கிக் கிடக்கிறான். அதுதானே இருதலையும் ஒத்த எழிற்பெருங்காதல்; அதுதானே அன்பு. திருவள்ளுவர் அகனைந்திணை வாழ்க்கையில் எச்சில் அமுதமாவதை எடுத்துக் காட்டினார். குமரகுருபர அடிகள் ஞான வாழ்க்கையில் எச்சில் அமுதமாவதைப் பண்டார மும்மணிக்கோவையில் எடுத்துக்காட்டினார். இறைவனோடு கொண்ட இன்ப அன்பு உறவில் கண்ணப்பரின் எச்சில் இறைவனுக்கு அமுதமாவதைச் சேக்கிழார் வடித்துக் காட்டினார்.

விதிமுறைகள் வளர்ச்சிக்கு இன்றியமையாதன. பயிருக்கு வேலி போல்வன. ஆனால் விதிமுறைகளையே சமயமெனக் கருதி மாழ்கி விடுதல் கூடாது. நம்மை முறுகிய அன்பு நெறியில் வளர்க்கவே விதிமுறைகள் துணை செய்ய வேண்டும். மாறாக ஆணவத் தடிப்பையும், சாதிப் பிணைக்கையும், பகையையும் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையான இழிவு மனப்பான்மையையும், உயர்வு மனப்பான்மையையும் விதிமுறைகள் என்ற பேரால் அனுமதிப்பது பெரும் குற்றமாகும்.

சாதிசடங்கு வழிபாட்டின் சின்னமாக சிவகோசரியாரையும், ஆராஅன்பு வழிபாட்டின் சின்னமாக கண்ணப்பரையும் காட்டிச் சிவகோசரியார் வழிபாட்டிலும் கண்ணப்பர் வழிபாடு அறிவாலும் அன்பாலும் தனக்கு மிகவும் உகந்தது என்று இறைவனே நன்கு எடுத்துக்காட்டி உணர்த்திய பிறகும் கூட நம்முடைய கோயில்களில் அன்பு வழிபாட்டுக்குரிய சிறந்த சூழலை உருவாக்கினோமில்லை. இத்தகு வரலாறு நிகழாத -அப்பரடிகள் திருவவதாரம் செய்யாத வடபுலத்துக் காசியில் கூடப் பலரும் இறைவனைத் தொட்டுத் தாமே பூம்புனலும் வார்த்தும் தூவியும் வழிபாடு செய்யும் உரிமை இருக்கிறது. ஆனால் நம்முடைய

நாட்டிலோ "மோகமாய் ஓடிச் சென்றார், உச்சிமோந்தார்" என்ற கண்ணப்பர் வரலாற்றைக் கனியக் கனியப் பேசுகின்றோம். அங்ஙனம் பேசும் நம் நாட்டில் உள்ள திருக்கோயிலில் இறைவனுக்கு நேரடியாகப் பூவும் நீரும் இட்டு வழிபாடு செய்யும் உரிமை நமக்கு இல்லை.

நம்முடைய திருமுறைகள் எல்லாம் இறைவனுக்குப் பூவும் நீரும் இட்டு வழிபாடு செய்தலை எடுத்துக் காட்டுகின்றன திருவையாற்றுத் திருப்பதிகத்தில் அப்பரடிகள் "போதொடு நீர் சுமந்து போவார் அவர் பின் யான் புகுவேன்" என்று அருளிச் செய்துள்ளமையும், "சலம்பூவோடு தூபம் மறந்தறியேன்" என்றருளிச் செய்தமையையும் ஓர்க. இதனால் நம்முடைய திருக்கோயில்களில் உள்ள சிவாச்சாரியார்களுடைய உரிமையையும் தகுதியையும் மறுக்கின்றோமில்லை. மறுக்கவும் இயலாது. இறைவனே வழிபாடு செய்யும் முறையை உணர்த்திக்காட்ட "ஐயாறதனில் சைவனாக வந்தார்" என்று திருவாசகம் பேசுகிறது. இன்றும் திருவையாற்றில் தன்னைத்தானே பூசித்தல் என்ற திருவிழா நிகழ்ந்து வருகிறது. ஆதலால் சிவாச்சாரியார்கள் நம்முடைய சமயத் திருக்கோயில் வழிபாட்டு முறைக்கு இன்றியமையாதவர்கள். நாமெல்லாம் திருக்கோயிலுக்குச் சென்று பூவும் நீருமிட்டு வழிபட்டாலும் ஒவ்வொரு போதே செய்ய இயலும். அவர்கள் முப்போதும் திருமேனி தீண்டித் திருவருட் காப்பைப் பேணுபவர்கள். வருகிறவர்களுக்கும் வழிபாட்டுணர்வைத் தூண்டிச் செய்து காட்டிச் செய்யச் செய்பவர்கள். இதனால் மரபும் காப்பாற்றப்படும். வழிபாட்டில் ஈடுபடுபவர்கள் அனைவரும் நினைந்து நினைந்து, நனைந்து நனைந்து, நெகிழ்ந்து நெகிழ்ந்து வழிபாட்டில் ஈடுபடவும் முடியும். ஆவியோடாக்கை புரை புரை கனிய என்புத் துளைதொறும் திருவருளின்பம் பாய வழிபாட்டின்பம் பெற முடியும். இந்த மாற்றம் இன்றைய உடனடியான தேவை.

திருக்கோவில்களில் மெய்யடியார்கள் சென்று பூவும் நீருங்கொண்டு வழிபாடு செய்யுமாறு திருமுறை சித்தாந்த நூல்களுக்கியையத் தொன்மையில் நம் நாட்டில் நிகழ்ந்த பெரிய புராண இலக்கியச் சான்றுகள் பல. அவற்றுள் சில வருமாறு: கண்ணப்பர், சாக்கியர், திருநீல நக்கர், திருமுருகர், முதலியோர் இவற்றை வரும் வெண்பாவில் நினைவு கூரத் தருகின்றோம்.

''நன்னெறிக்கிங் காசான்நூல் நால்வரசர் எண் முறையும்
துன்னுதுணை நான்கேனை தொல்சிவன்றாள் - மன்னுவிக்கும்
சீலமுதல் நாற்படியும் போற்றி மறை பூத்தூவல்
சால்பெழுத்தைந் தோதல் வழிபாடு''.
(எண்முறை - எட்டுத்திருமுறை)

கோவில்வழி பாட்டில் குறைவில்சமு தாயத்தார்
யாவர்க்கும் பூநீர் எழிற்கையார் தூவி ஐந்தும்
ஓதுரிமை நாட்டினர்நம் கண்ணப்பர் சாக்கியனார்
ஓதுநக்கர்பூ முருகர் ஓர். ''

திருக்கோயில் வழிபாட்டில் எளிய சடங்குகள் இடம்பெற வேண்டும். காலமும் பொருளும் மிச்சமாக வேண்டும். கால விரிவும், பொருள் விரிவும் மட்டுமே கடவுள் விரும்புவன அல்ல. ''சட்டோ, நினைக்க மனத்தமுதாம்'' என்றார் மாணிக்கவாசகப் பெருமான் திருமுறைகள் காட்டும் வழிபாட்டு நெறி முறைகள் திருக்கோயில்களில் மிகுதியும் இடம்பெற வேண்டும். நமது வழிபாட்டு முறைகள் இறைவனுக்குப் பூவும் நீரும் மிகவும் உரியன. தூபமும் தீபமும் உரியன. இவற்றோடு நெஞ்சை நெகிழச் செய்யும் பண்ணிசையும் தேவை. இவை தம்மோடு இன்றியமையாதது தேவைப்படுவது நெஞ்சும் ஆகும். (பலர் நெஞ்சினைத் தவிர மற்றுத் தேங்காய், பழம், ஏன்? முடியே கூடத் தருகிறார்கள் ஐயோ, பாவம்) இவை கொண்டு நிகழ்த்துவதே உண்மையான வழிபாடு.

மூவர் தமிழில் மடைப்பள்ளியைக் காணோம். ஆங்கே பிரசாத மகிமையையும் காணோம். இன்றோ நம்முடைய கோயில்களின் பெரும் நிதிகளை மடைப்பள்ளிகளே விழுங்கிக் கொண்டிருக்கின்றன. ஆதலால் எல்லாருக்கும் எளிமையில் இயலும் பூவும் நீருமிட்டு நால்வர் தந்த நற்றமிழால் பாடி வழிபாடு செய்தலே சிறந்த வழிபாடு. இதற்குரிய சூழல் உருவாக வேண்டும் என்பது நமது பெரு விருப்பம். திருக்கோயில் வழிபாட்டில் பயனற்ற மரபு தவறிய வழிகளில் நிதியைச் செலவழிக்காது சிக்கனம் கையாளப் பெற வேண்டும். எஞ்சிய தொகையை இறைவனின் கருணைக்கு ஆளாகக் கூடிய உயிர்வர்க்கத்தின் முன்னேற்றத்திற்கு உரிய ஆக்கப் பணிகளில் செலவிட வேண்டும்.

வழிபாட்டில் இறைவன் ஏற்றுக்கொள்வது வழிபடுவோரின் தூய அன்பினையேயாம். வழிபடுவோரால் செய்யப்படும் வழிபாட்டுத் துணைகள் அவனுடைய அன்பை வெளிப்படுத்தும் புறக்கருவிகளேயாம்.

இவ்வுண்மை வருமாறு :
''வேட்டவி யுண்ணும் விரிசடை நந்திக்குக்
காட்டவும் நாமிலோம் காலையும் மாலையும்
ஊட்டவி யாவன உள்ளங் குளிர்விக்கும்

பாட்டவி காட்டுதும் பாலவி யாமே''.
- திருமந்திரம்

ஒவ்வொரு திருக்கோயிலும், திருக்கோயில் அமைந்துள்ள ஐந்து மைல் வட்டத்திற்குள் உள்ள எல்லா மக்களையும் அந்தக் கோயிற்கு உரிமையுடைய மக்களாக ஏற்றுப் பதிவு செய்ய வேண்டும். அவர்களின் நலன்களைப் பேணி வளர்த்துப் பாதுகாக்கும் பெட்டகமாகத் திருக்கோயில்கள் அமைய வேண்டும். அக்கோயிலைச் சார்ந்த மக்கள் நலமார வாழ்ந்து நன்றுடையானைச் சூழ்ந்து ஊனினிக்க, உயிரினிக்கப் பாடிப் பரவி மகிழ்ந்து வாழ்ந்திடுதல் வேண்டும். இதுவே உண்மையான சமய அமைப்பு. இன்றோ நம்முடைய திருக்கோயில்களிலும் திருமடங்களிலும் காணி, பூமி, அண்டா சட்டி உடைமைகளின் பட்டியல்

புத்தகம் உண்டு. இல்லாது போனாலும் இந்துமத அறநிலைய இலாகா விடாது. சமய நிறுவனங்களின் பொருள் நிலை வளருமியல்புடைய ஆன்மாக்களின் அருளாதாரத்திற்கு அடிப்படையாகும். இதனை மறந்து பொருளாதாரம் போற்றிப் பயனென்ன?

நம்முடைய திருக்கோயில்கள் திருமடங்கள் காலத்தினாற் தோன்றிய சமய அமைப்புகள் அனைத்தும் ஓரணியில் ஒருங்கு இணைக்கப்பட்ட ஓரமைப்பாக உருப்பெறுதல் வேண்டும். இவைகளை மையமாகக் கொண்ட பொருளாதாரமும் மனித சத்தியும் ஒருமுகப்படுத்தப் பெறவேண்டும். நம்முடைய சமுதாயத்தின் ஏழ்மையையும் வறுமையையும் மாற்ற வேண்டும். நம்முடைய சமுதாயத்திற்குப் பயிற்றிப் பல கல்வி தர வேண்டும். உற்ற பிணிக்கு மருந்து தர வேண்டும். ஆறுதலற்று அலமரும்பொழுது அணைத்து ஆதரவு கூறித் தேற்றிட நாடெங்கும் நம் சமயத் தொண்டர்கள், கையில் வலிமையும் நெஞ்சில் தொண்டுணர்வும் உயிரில் சிவச் சிந்தனையும் தாங்கித் திருத்தொண்டு செய்தல் வேண்டும். சைவத் தமிழ் மகனுக்கு இது புது நெறியோ? இல்லை, தொன்மை நெறி. திருவீழிமிழலையில் கண்ட பஞ்சம் கனிவுறு தொண்டால் மாற்றப் பெறவில்லையா? கண்ணுதற் கடவுளும் தோள் கொடுக்கவில்லையா? திருச்செங்குன்றூரிற் கண்ட நடுங்கு குளிர் சுரம் மாற்றவில்லையா? செங்குன்றூர் மேய பிரான் துணை செய்யவில்லையா? நான் மாடக் கூடலில் தாழ்வான பன்றிக்குட்டியின் பசியும் பொறுத்திடாது தாய்ப்பன்றியாகவே வந்துதித்த கருணையின் திருமேனியை வழிபடும் நமது சமுதாயத்தில் வறுமையும் பிணியும் நமக்கு ஓர் அறைகூவல் அல்லவோ? அன்பு கூர்ந்து அனைவரும் எண்ணுங்கள்.

நன்றி: லண்டன் முருகன் கோயில் குடமுழுக்கு விழா மலர்

